

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை சட்டப்போராட்டம் கண்டு மீட்டுக்கொடுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மக்களுக்கு இனிப்புகள் வழங்கிய போது எடுத்தபடம்.



சென்னை தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் அடையாறு த. சரவணனின் புதல்வர் மாணவர் ச. தர்ஷன், "India Book of World Records நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிலம்பம் மற்றும் கம்பு சுழற்றுவதில் பதக்கம் மற்றும் நற்சான்று பெற்றதையொட்டி, அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் வாழ்த்துப் பெற்றார்.

### தஞ்சை மாவட்டத்தில்

# ரூ.6.17 கோடியில் புதிய சுகாதார மையக் கட்டிடங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டினார்.

தஞ்சாவூர் மே.19.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமணையில் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தலைமையில் நடைபெற்ற விழாவில், அரசு தலைமை கொறடா முனைவர். கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை பாராளு மன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அதனை தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பல்வேறு புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள் .

பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க தஞ்சாவூர் மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் மெலட்டூர் ஊராட்சியில் ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய வெளி நோயாளிகள் பிரிவு புதிய கட்டிடமும், கபிஸ்தலம் ஊராட்சியில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர் குடியிருப்பு புதிய கட்டிடமும், திருவைகாவூர் ஊராட்சியில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம் திறந்து வைத்து கர்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கப்பட்டது, உமையாள்புரம் ஊராட்சியில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடமும், கூகூர் ஊராட்சியில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம் என மொத்தம் ரூபாய் 163 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சுகாதார நிலைய கட்டிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கும்பகோணம் தலைமை மருத்துவமனையில் மாநிலங்களவை உறுப்பினர் திரு. சு.கல்யாணசுந்தரம் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 400 இலட்சம் மதிப்பீட்டில் கும்பகோணம் தலைமை மருத்துவமனையில் நோயாளிகள் காத்திருக்கும் கூடம் மற்றும் வார்டு அமைப்பதற்கும், ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் அம்மாபேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கும், ரூபாய் 120 இலட்சம் மதிப்பீட்டில் திப்பிராஜபுரம் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கும், ரூபாய் 22.75 இலட்சம் மதிப்பீட்டில் பட்டீஸ்வரம் செவிலியர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கும் என மொத்தம் 617.75 லட்சம் புதிய சுகாதார கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

மேலும் தமிழகத்தை பொறுத்தவரை 38 வருவாய் மாவட்டங்களும், 45 சுகாதார மாவட்டங்களும் உள்ளன மேலும் கும்பகோணம் சுகாதார மாவட்டங் களாக விரைவில் அறிவிக்கப்படும் என்றும் மேலும் பத்திரிக்கையாளர்கள் கேள்விக்கு பதில் அளிக்கையில் விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் குடித்து இறந்தவர்களின் குடும்பத்தின் எதிர் காலத்தை கருத்தில் மனிதாபத்தோடு முதல்வர் நிவாரணம் அளித்துள்ளார்.

கடந்த அதிமுக ஆட்சியில் முதல்வராக இருந்தவர்களும் நிவாரணம் அளித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையை வழங்கியதை கொச்சைப்படுத்துவது என்பது,எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்புக்கு அழகானது அல்ல.

எத்தனால் விலை அதிகம் என்பதால் கள்ளச் சாராயம் காய்ச்சும் நபர்கள், குறைந்த விலையிலான மெத்தனாலை பயன்படுத்தியுள்ளனர். இதனை அதிகமாகப் பயன்படுத்தும் போது, உயிரிழப்புகளை உருவாக்கும். இதனைத் தொடர்ந்து எத்தனால் மற்றும் மெத்தனால் விநியோகம், விற்பனை, உற்பத்தி, அதன் பயன்பாடு ஆகியவற்றைக் கண்காணிக்கவும். வேறு பயன்பாட்டுக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பது குறித்து அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், சுகாதாரத் துறையினர் அனைவரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளோம்.

இந்தப் பிரச்சனைக்கு முதல்வர் ராஜினாமா செய்ய வேண்டும் என சில அரசியல் தலைவர் கூறுகிறார்கள். அப்படி என்றால், முதல்வராக இருந்த ஜெயலலிதா, ஓபிஎஸ், இபிஎஸ் போன்றவர்கள் எத்தனை முறை ராஜினாமா செய்திருக்க வேண்டும். கடந்த காலங்களில் கொடநாட்டில் நடந்த 5 கொலை, தற்கொலைகளுக்கு, பழனிச்சாமி எத்தனை முறை ராஜினாமா செய்திருக்க வேண்டும். பழனிச்சாமி அடுத்த முறை பேசும் போது கவனமுடன் பேச வேண்டும்.

இது போன்ற விஷயங்களில் எடுத்தோம், கவுத்தோம் என அரசியல் தலைவர்கள் பேசுவது முறையல்ல. கிராமங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது குறித்து, அப்பகுதி மக்கள் தைரியத்துடன் போலீஸாருக்கும், வருவாய்த் துறையினருக்கும் தகவல் அளிக்கும் மனநிலையை பெற வேண்டும். குறிப்பாக, இளைஞர்கள் தன்னார்வ அடிப்படையில், இது போன்ற குற்றச் செயல்களை தடுக்கும் பணியில் ஈடுபட வேண்டும்.

மேலும், சுகாதாரத் துறையில் 4,308 செவிலியர் காலிப் பணியிடங்கள் நிரப்பு வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, துறை வாரியாக பணி நியமனங்கள் முடிவு பெற்று, அவர்கள் பணியில் சேர்ந்த வண்ணம் உள்ளார்கள். இதேபோல் 1021 மருத்துவர் பணிக்கும், 900 மருந்தாளுநர் பணிக்கும், இன்னும் 10 நாட்களில் தேர்வு முடிவுகள் வெளியாகி, தேர்வு பெற்றவர்கள் பணியில் அமர்த்தப்படு வார்கள். நிகழாண்டு நிதி நிலை அறிக்கையில் கூறியது போல் புதிதாக 4,000 மருத்துவ பணியாளர்களை பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை 38 வருவாய் மாவட்டங்களும், 45 சுகாதார மாவட்டங்களும் உள்ளன. விரைவில் கும்பகோணம், திருவள்ளூர், கடலூர் ஆகியவைகள் புதிய துணை சுகாதார மாவட்டங்களாக அறிவிக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

முன்னதாக பாபநாசம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைச்சர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு. பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டு அறிந்தார் தொடர்ந்து கபிஸ்தலம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் இன்று உலக உயர் ரத்த அழுத்த தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ரத்த அழுத்த பரிசோதனை சிறப்பு முகாமினை துவக்கி வைத்து கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், சாக்கோட்டை க.அன்பழகன், முனைவர் எம்.ஹெச்.ஜவாஹிருல்லா, நிவேதா மு.முருகன், இயக்குநர் மரு.தி.சி. செல்வ விநாயகம், இணை இயக்குனர் மரு.தி லகம், கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் பூர்ணிமா, செயற்பொறியாளர் பொறி.நாகவேலு, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், துணை மேயர்கள் சு.ப.தமிழழகன் (கும்பகோணம்), அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் மரு. பா.கலைவாணி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் சு.க.முத்துசெல்வம், ஒன்றிய குழு தலைவர்கள் சுபா, சுமதி கண்ணதாசன் (பாபநாசம்), கே.வி.கலைச்செல்வன் (அம்மாபேட்டை) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### எஸ்.கதிரவன் தலைமை! நகர இளைஞர் அணி - மாணவர் அணி சார்பில்

# குன்றத்தூர் நகரத்தில் அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாகம்மை கருப்பையா, படப்பை ஆ.மனோகரன், கோ.சத்தியமூர்த்தி சிறப்புரை!

சென்னை, மே 19 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் நகர திமுக இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரப் பொதுக் கூட்டம் நாளை (20.5.2023 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் அருகில் நடைபெறுகிறது.

நகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.கதிரவன் தலைமை வகிக்கிறார்.

வார்டுச் செயலாளர் கே.என்.சசிகுமார் வரவேற்கிறார்.

எம்.ஹரிகிருஷ்ணன், ஏ.ராஜேஷ்குமார், இரா. வேலாயுதம், எஸ்.மோகன், ஆர்.கோபிநாத், ஆர். நரேஷ்குமார், ஆர்.கே. செல்வமணி, ஆர்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான தா. மோ.அன்பரசன், தலைமை கழக பேச்சாளர் நாகம்மை கருப்பையா, மாவட்ட ஊராட்சித் தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், நகர மன்ற தலைவர், குன்றத்தூர் நகர கழகச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் டி.கே. குமாரசாமி, ஏ.கோதண்டம், அ.தமிழ்மாறன், டி. எஸ்.கலைச்செல்வன், டி. திருநாவுக்கரசு, எம்.சங்கர், என்.குணசேகர், க.வே. சிதம்பரம், ஜெ.மணிமாறன், ஆர்.கே.அபிபுன்னிசா, த.கந்தசாமி, என். கருணாநிதி, டி.என். அருள்மொழி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். கே.டில்லிபாபு நன்றி கூறுகிறார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

# 73 'அ' வட்டச் செயல்வீரர்கள் - பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் தே.சுரேஷ் குமார் (எ) பொல்லு சுரேஷ் வேண்டுகோள்!

சென்னை, மே 19-

திரு.வி.க. நகர் 73 'அ' வட்டக் கழகச் செயலாளர் தே.சுரேஷ் குமார் (எ) மொல்லு சுரேஷ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் தெற்குப் பகுதி 73 'அ' வட்ட செயல்வீரர் கூட்டம் இன்று (19.5.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு டாக்டர் அம்பேத்கர் காலேஜ் ரோடு, இக்பால் மினிஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, புதிய உறுப்பினர் சேர்த்தல் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்து மற்றும் கழகு ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி பேசுகிறார்.

இதில் மேயர் பிரியராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் எம்.சாமிக்கண்ணு, தொகுதிப் பார்வையாளர் மு. தம்பிதுரை ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், பிற அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் அனைத்து கழக உடன்பிறப்புகள் மற்றும் கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் தே.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.


### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி சார்பில்

# தொடர் தெருமுனை பிரச்சார கூட்டங்கள்!



மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ அறிவிப்பு

**திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி சார்பில், கழக அரசின் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு கால சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டங்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் கழக செற்பொழிவாளர்களை கொண்டு ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி சார்பில் சிறப்பாக நடைபெற உள்ளது. மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ள தொடர் தெருமுனைப் பிரச்சார கூட்டங்களுக்கு மேற்பார்வையாளர்களாக நியமிக்கபட்டு உள்ளனர்.**

**பட்டியலில் அறிவிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் கூட்டங்களில் பங்கேற்று கூட்டத்தினை சிறப்பாக நடத்திட வேண்டுகிறேன்**

| நாள் | ஒன்றியம் – நகர – பேரூர் | பங்கேற்கும் நிர்வாகிகள் |
|---|---|---|
| 23.05.2023 செவ்வாய் | கும்முடிப்பூண்டி தெற்கு | கி.வே.ஆனந்தகுமார், மு.பகலவன் |
| 24.05.2023 புதன் | எல்லாபுரம் தெற்கு | ஆ.சத்தியவேல், ஜெ.மூர்த்தி |
| 28.05.2023 ஞாயிறு | பொன்னேரி நகரம் | ரவிக்குமார்,கே.வி.ஜி.உமாமகேஸ்வரி |
| 25.05.2023 வியாழன் | பூண்டி வடக்கு | ஜான் (எ) பொன்னுசாமி, எம்.எல்.ரவி |
| 24.05.2023 புதன் | மீஞ்சூர் தெற்கு | கா.சு.ஜெகதீசன், மு.கதிரவன் |
| 25.05.2023வியாழன் | ஊத்துக்கோட்டை பேரூர் | அபிராமி குமரவேல், எஸ்.ரமேஷ் |
| 21.05.2023 ஞாயிறு | கும்முடிப்பூண்டி மேற்கு | மு.மணிபாலன், .வெங்கடாசலபதி; |
| 22.05.2023 திங்கள் | கும்முடிப்பூண்டி கிழக்கு | ந.பரிமளம், பா.செ.குணசேகர் |
| 26.05.2023 வெள்ளி | மீஞ்சூர் பேரூர் | க.சுதமிழ் உதயன், கே.சுப்பிரமணி |
| 25.05.2023 வியாழன் | பூண்டி கிழக்கு | டி.கே.சந்திரசேகர், ஏ.வி.ராமமூர்த்தி |
| 23.05.2023 செவ்வாய் | கும்முடிப்பூண்டி பேரூர் | இரா.அறிவழகன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் |
| 27.05.2023 சனி | மீஞ்சூர் வடக்கு | பா.சுகுமாறன், வெற்றி (எ) ராஜேஷ் |
| 27.05.2023 சனி | எல்லாபுரம் வடக்கு | ஜெ.மூர்த்தி, மு.பாஸ்கர் |
| 26.05.2023 வெள்ளி | மீஞ்சூர் கிழக்கு | எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், என்.கிருஷ்ணமூர்த்தி |
| 28.05.2023 ஞாயிறு | சோழவரம் வடக்கு | நா.செல்வசேகரன், கே.ஆறுமுகம் |
| 28.05.2023 ஞாயிறு | ஆரணி பேரூர் | பி.முத்து, பழவை அலவி |

**டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ.**

செயலாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.


### துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த

# மயிலாடுதுறை மீனவர்களுக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி!

## கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, மே 19 -

துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த நாகை மாவட்டம் வானகிரி மீனவ கிராமத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களுக்கு மாநில மீனவரணி துணைத் தலைவரும் திருவொற்றி யூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர் ரூபாய் 2,00,000 நிதி உதவி வழங்கினார்.

நாகை மாவட்டம் மயிலாடுதுறை வானகிரியைச் சேர்ந்த மீனவர்கள் 21.10.2022 அன்று கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது இந்திய கடலோர காவல் படை சந்தேகத்தின் பேரில் துப்பாக்கிச் சூடு நடத்தி விசைப்படகில் மீன் பிடித்துக் கொண்டி ருந்தவர்களை கைது செய்து விசாரித்து பின்னர் விடுதலை செய்தது.

துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த மீனவர் கே.வீரவேல் இதுவரை கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் அச்சத்துடனே வாழ்ந்து வருவதாகவும் தனக்கு உதவிடுமாறு மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கரை சந்தித்து கோரிக்கை வைத்தார். அவருக்கு ஆறுதல் கூறி மாநில_மீனவரணி சார்பில் ரூபாய் 1,00,000 வழங்கினார்.

முன்னதாக துப்பாக்கி சூட்டில் காயம் அடைந்த மீனவர்கள் செல்வகுமார், சுரேஷ், செல்வதுரை, மோகன்ராஜ் ஆகியோருக்கு கே.பி.சங்கர் எம்.எல். ஏ. தலா ரூபாய் 25,000 வீதம் ஒரு லட்ச ரூபாய் (1,00,000) வழங்கி உதவினார்.

### ஜல்லிக்கட்டுப் போட்டி:

# புதுக்கோட்டையில் இனிப்பு வழங்கல்!

## கே.கே.செல்லபாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, மே 19 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் தொடர் சட்டப் போராட்டத்தின் விளைவாக, ஜல்லிக்கட்டுக்கு தடையில்லை என உச்ச நீதிமன்றத் தீர்ப்பை பெற்றுத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் நகர கழகம் சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் இனிப்பு வழங்கி, பட்டாசு வெடித்து கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா, எம். சின்னத்துரை, அரு.வீரமணி, பெ.ராஜேஸ்வரி, எம்.லியாக்கத் அலி, ஆ.செந்தில், தென்னலூர் எம்.பழனியப்பன், முனைவர்செ.குறிஞ்சிவாணன், பூங்குடி சிவா, மு.கலைஞர் கருணாநிதி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி 96–வது வட்டச் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பின்படி பகுதிச் செயலாளர் வே.வாசு முன்னிலையில் நடைபெற்றது. வேதா தலைமை தாங்கிட, சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், பி.டி.சி.பாலு ஆகியோர் பேசினர். வெங்கடேசன் நன்றி கூறினார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்ட சிறுபான்மை அணி

# அமைப்பாளர் ஐ.ஏ.மகிமைதாஸ் மறைவு!



சென்னை, மே 19 -

திருவள்ளூர் மாவட்ட கழக முன்னாள் துணைச் செயலாளரும் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினரும் பூண்டி ஒன்றியம் திருப்பாச்சூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும் இந்நாள் திருவள்ளூர் மேற்கு மாவட்ட சிறுபான்மை நல பிரிவு அமைப்பாளருமான ஐ.ஏ.மகிமைதாஸ் திடீர் மாரடைப்பு காரணமாக நேற்று (18.5.2023) பிற்பகல் 11.00 மணியளவில் மறைவு எய்தினார். அன்னாரின் உடலுக்கு கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நாளை (20.5.2023) சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் திருவள்ளூர் அடுத்த திருப்பாச்சூரில் உள்ள கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது என ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அம்பத்தூர் தெற்கு பகுதி 88வது வட்ட செயல்வீரர் கூட்டம் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர், பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி வட்ட கழக செயலாளர் சி.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர். நிறைவாக கலைஞர் பித்தன் சுப்பு (என்கிற) சுப்பிரமணி நன்றி கூறுகிறார்.